## வகுப்பு - 10

## இயல் 1

## கவிதைப்பேழை

### இரட்டுறமொழிதல்

**குறுவினா**

**I 1. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?**

இரட்டுற மொழிதல் = இரண்டு + உற + மொழிதல்

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும்,
- இதனைச் சிலேடை அணி என்றும் அழைப்பர். செய்யுளிலும் உரைநடையிலும், மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**2. 'முத்தமிழ்' – தொகைச் சொல்லை விரித்து எழுதுக.**

- இயல்
- இசை
- நாடகம் ஆகியன முத்தமிழ் எனப்படும்.

**3. முச்சங்கம் - தொகைச் சொல்லை விரித்து எழுதுக,**

- முதற்சங்கம்
- இடைச்சங்கம்
- கடைச்சங்கம்

**4. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

***II. சிறுவினா***

***1. தமிழழகனார், தமிழையும், கடலையும் இரட்டுற மொழிதல் பாங்கினை விளக்குக.***

***தமிழ் :***

- *தமிழ் , இயல், இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது, முதல், இடை, கடை ஆகிய முச்சங்களால் வளர்க்கப்பட்டது.*
- *ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.*

***கடல் :***

- *கடல் முத்தினையும் , அமிழ்தினையும் தருகிறது,*
- *வெண்சங்கு , சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய முன்று வகையான சங்குகளைத் தருகிறது.*
- *மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது,*

***III. செய்யுளடி வினாவிற்கு விடையளி.***

***முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்***
***மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்***
***அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு***
***இணைகிடந்த தேதமிழ் ஈண்டு***

***வினாக்கள்:***

*1. இயல், இசை, நாடகம் __________________ என அழைக்கப்படுகிறது*

*அ. முப்பொருள் ஆ. முப்பால் இ. மூவிடம்* ***ஈ. முத்தமிழ்***

*2. தமிழை __________________ வைத்து வளர்த்தனர்.*

*அ. கணினி ஆ. புத்தகம்* ***இ. முச்சங்கம்*** *ஈ. உரைநடை*

*3. தமிழ் __________________ அணிகலன்களாகக் கொண்டது.*

*அ. சிலேடையணி* ***ஆ, ஐம்பெருங்காப்பியங்களை***

*இ. இலக்கணங்களை ஈ. பாக்களை*

*4. இரட்டுற மொழிதல் அணியை __________________ என்றும் அழைப்பர்.*

***அ. சிலேடையணி*** *ஆ. உவமையணி*

*இ. உருவக அணி ஈ. உயர்வு நவிற்சியணி*

*5. சத்தக்கவிமணி என குறிப்பிப்படுபவர் __________________ .*

*அ. பெருஞ்சித்திரனார்* ***ஆ, தமிழழகனார்***

*இ. தமிழன்பன் ஈ. தமிழ்க்கவி*